# வானத்திலிருந்து

வானத்திலிருந்து வையகம் எழுந்து
புனித ஆவியே வருக
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும்
மாசற்ற அன்பே வருக (2)

உயிருக்கு உயிரே வாழ்வுக்கு வாழ்வே
உண்மையின் வடிவே வருக
பயிருக்கு மழையே பார்வையின் ஒளியே
பரமனின் அருளே வருக (2)

வானத்திலிருந்து வையகம் எழுந்து
புனித ஆவியே வருக
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும்
மாசற்ற அன்பே வருக

காத்திருப்போரின் காரிருள் போக்கும்
காலைக் கதிரோன் வருக
ஆழ்கடல் மீதினில் அலைந்திடும் எனக்கு
ஆனந்த நிலையே வருக (2)

வானத்திலிருந்து வையகம் எழுந்து
புனித ஆவியே வருக
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும்
மாசற்ற அன்பே வருக

மனிதனின் மனதில் மணியெனத் துலங்கும்
மாணிக்க விளக்கே வருக
இனிய நல்வாழ்வை உவப்புடன் வழங்கும்
இன்னருட் பெருக்கே வருக (2)

வானத்திலிருந்து வையகம் எழுந்து
புனித ஆவியே வருக
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும்
மாசற்ற அன்பே வருக (2)
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும்
மாசற்ற அன்பே வருக